ராணி காமிக்ஸ்
ஜேம்ஸ் பாண்டு 007
ஆவேச அதிரடி!
அதிர்வெடி அழகி!
வண்ணப் படக்கதை

ராணி காமிக்ஸ் – 469
(மாதம் இருமுறை இதழ்)

ஜனவரி 1, 2004.

லண்டன் இரகசிய போலீசின் தலைமை அலுவலகம்.
ஜேம்ஸ்பாண்டு கெய்ரோவிலிருந்து ஒரு பெண்ணை அழைத்து வருகிறாராமே?
ஆமாம், சார். அவள் பெயர் நான்சி.

அவள் என்ன செய்கிறாள்?
வாலட் என்ற விஞ்ஞானிக்கு உதவியாளராக இருக்கிறாள்!

அடுத்த நாள் நான்சியுடன் ஜேம்ஸ்பாண்டு வந்தார்.
இங்கிலாந்து அரசுக்கு விற்கக்கூடிய ஒரு பொருள் உன்னிடம் இருக்கிறதாமே, நான்சி. அது என்ன?
டாக்டர் வாலட் கண்டுபிடித்துள்ள கதிர்க்குண்டு அது!

அப்படி என்ன அற்புதக் குண்டு அது?
அது அணு ஆற்றல் குண்டு. பறந்து போவதும் தெரியாது! தாக்குவதும் தெரியாது!
அந்தக் குண்டைப் பார்க்கலாமா?
விலை படிந்தால் பார்க்கலாம்!
என்ன விலை எதிர்பார்க்கிறீர்கள்?
ஐம்பது இலட்சம் பவுன்!
அரைக் கோடி! ஆளைப் பார்க்காமல் எப்படிப் பேரம் பேசுவது?
என்னிடமே பேசலாம்! கதிர்குண்டை பரிசோதித்தும் காட்டுகிறேன்!!

டாக்டர் வாலட்டைப் பார்க்க முடியாதா?
இப்போது முடியாது! பேரம் படிந்தால் பார்க்கலாம்!
அரசாங்கத்திடம் பேசிவிட்டுத்தான் சொல்ல வேண்டும்!
சொல்லுங்கள்! நான் வருகிறேன்! தயவு செய்து யாரும் என்னைப் பின்தொடர வேண்டாம்!
நான்சி போய்விட்டாள்.
ஜேம்ஸ்! அவள் பேசுவதைப் பார்த்தால், வாலட் லண்டனில் இருப்பது போலத் தெரிகிறது!
நானும் அப்படித்தான் நினைக்கிறேன், பாஸ்!
இவளை ஏன் இங்கே அழைத்து வந்தீர்கள்?
அந்த இரகசிய ஆயுதம் பற்றி அறியத்தான்!
என்னை யாரும் பின்தொடரக்கூடாது என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாளே!
அப்படி விட்டுவிட முடியுமா?

ஜேம்ஸ்பாண்டு ஆள் அடையாளம் தெரியாதபடி ஒட்டு மீசை வைத்துக்கொண்டார்.
இப்போது அடையாளம் தெரியாது! நான்சியைப் பின்தொடர்கிறேன்!!
நான்சி ஒரு கடையில் நின்றாள்.
அமெரிக்க டாலருக்கு இங்கிலாந்து பவுன் கிடைக்குமா?
ஓ! அந்த அழகி நீதானா? இந்த பாக்கெட்டில் பவுன் நோட்டுகள் இருக்கின்றன!
வந்துகொண்டிருந்த ஜேம்ஸ்பாண்டு கழுத்தில் பின்னேயிருந்து ஒருவன் கயிறு போட்டு இழுத்தான்!
ஆ!
கழுத்து இறுக்கப்பட்ட ஜேம்ஸ், பின்பக்கமாக அவன் காலில் உதைத்தார்!

இருவரும் கீழே விழுந்தார்கள். ஜேம்ஸ் கத்தியை எடுத்தார்.
யார் நீ?
ஜேம்ஸ் அவன் வயிற்றில் கத்தியைப் பாய்ச்சினார்
ஆ! கொலை!
ஏ... மிஸ்டர்! ஏன் அவனைக் கத்தியால் குத்தினாய்?
இல்லையே! வேகமாக நடக்கும்போது இருவரும் இடித்துக்கொண்டு, விழுந்துவிட்டோம்!
செத்திட்டான்!
போலீசைக் கூப்பிடு!
நழுவிட வேண்டியதுதான்!
இதற்கு இடையே நான்சியை ஒருவன் வழிமறித்தான்!
OPEN
கையில் இருப்பதை மரியாதையாகக் கொடுத்துவிடு!

இந்தா, வாங்கிக்கொள்!
ஆ!
நான்சி கைப்பையிலிருந்து ஸ்பிரே பாட்டில் ஒன்றை எடுத்தாள்!
அவன் முகத்தில் தெளித்தாள்!
ஆ! மூச்சு அடைக்குது!!
முகமெல்லாம் எரியுது!
ஏ... டாக்சி!
நான்சி டாக்சியில் ஏறிக்கொண்டாள்!
பாக்கெட்டில் என்ன இருக்கிறது?
பாக்கெட்டில் இருந்த கண்ணாடியை எடுத்து அணிந்துகொண்டாள்!
சின்ன போனும் இருக்கிறதே!

ஜேம்ஸ் அலுவலகத்துக்கு திரும்பினார்.
லீ! என்னை வழி மறித்தவன் யார் என்று தெரிந்ததா?
அப்போது கிரேசி வந்தாள்.
ஜேம்ஸ்! உங்களுக்கு போன். யாரோ ஒரு பெண் பேசுகிறாள்!
அலோ யார்... நான்சியா...? நான் ஜேம்ஸ்தான் பேசுகிறேன்!
கதிர்குண்டை வாங்கிக்கொள்ள வேறு ஒருவர் ஆர்வமாக இருக்கிறார்?
யார் அவர்?
எனக்குத் தெரியவில்லை! நீங்களே கண்டுபிடித்துக் கொள்ளுங்கள்!
குண்டை சோதித்துக் காட்டினால்தானே அதன் அற்புத சக்தி தெரியும்?

ஒரு உளவாளி மீது அந்த குண்டு ஏவப்படும்!
எங்களுக்குத் தெரியாமலே சோதனையா? செய்யுங்கள், பார்ப்போம்!
லண்டனில் நடந்த இரசாயன குண்டு எதிர்ப்பு மாநாட்டுக்கு இரு விஞ்ஞானிகள் வந்திருந்தார்கள் மாநாடு முடிந்தது!
நாம் ரஷியா திரும்ப வேண்டியதுதான்!
திடீர் என்று...
ஆ!
விஞ்ஞானி கார்போவ் ஒரு உளவாளியா? அவர் எப்படி நடுத்தெருவில் செத்தார்?
உடலில் ஒரு காயமும் இல்லை என்று போலீசார் சொல்லுகிறார்கள். உடல் ஆஸ்பத்திரியில் இருக்கிறது!
ஜேம்ஸ் மருத்துவமனைக்கு விரைந்தார்!
ஒரே மர்மமாக இருக்கிறதே!
ஜேம்ஸ் மருத்துவர்களை சந்தித்தார்.
தலையில் அணுக்கதிர் பாய்ந்து செத்திருப்பது பிரேத பரிசோதனையில் தெரிந்தது!

ஜேம்ஸ் தலைமை அலுவலகத்துக்குத் திரும்பி, விவரம் சொன்னார்.
கார்போவ்தான் நான்சி சொன்ன இரகசிய உளவாளியா?
அப்படித்தான் இருக்க வேண்டும்!
அப்போது ஒரு போன் வந்தது.
ஜேம்ஸ்! உனக்குத்தான்!
நான்சி பேசுகிறேன். எங்கள் கதிர்குண்டின் செயல்பாட்டைப் பார்த்தீர்களா?
டாக்டர் வாலட் உங்களுடன் பேச விரும்புகிறார்.
கார்போவ் உங்கள் குண்டால்தான் இறந்தார் என்று எப்படி நம்புவது?
என்னது... இன்னொரு சோதனை காட்டப் போகிறீர்களா?

ஆமா! ஒரு ஹெலிகாப்டரைப் பறக்கவிடுங்கள்! எங்கள் கதிர்குண்டால் அதை வீழ்த்துகிறேன்!
மறுநாள் தேம்ஸ் ஆற்றின் மீது ஹெலிகாப்டர் பறக்கவிடப்பட்டது!
இங்குதான் நமது பார்வையில் ஹெலிகாப்டர் இருக்கும்!
ஹெலிகாப்டர் வட்டமிட்டது!
தொடர்ந்து வட்டமடி!
அதோ வருகிறது!
ஒரு அடி பின்னே வா!

ஹெலிகாப்டர் பறந்துகொண்டே இருந்தது.
நம் வேலை முடிந்தது!
ஹெலிகாப்டரின் இறக்கைகள் வெடித்துச் சிதறின!
ஆற்றில் விழுந்து நொறுங்கியது!
அதிகாரிகளின் கூட்டம் நடந்தது.
ஹெலிகாப்டர் எப்படி வெடித்தது?
நம் கண்ணுக்குத் தெரியாமல் தாக்கப்பட்டிருக்கிறது!

அதிகாரிகளின் கூட்டத்தில் 'எம்' கலந்துகொண்டார்.
அந்த இரகசியக் குண்டுக்கு 50 இலட்சம் பவுன் கேட்கிறார்கள்!
கோடி கொடுத்தும் வாங்க வேண்டியதுதான்!
சிறிது நேரத்தில் நான்சி போன் செய்தாள்.
ஜேம்ஸ்! கதிர்குண்டின் வேலைப்பாடு உங்களுக்குத் திருப்திதானே?
முழு திருப்தி! எப்போதுபேசி முடிக்கலாம்?
சொல்லுகிறேன். கவனமாக கேளுங்கள்!

என்ன சொன்னாள்?
இன்று இரவு ஐம்பது இலட்சம் தங்கக் கட்டியுடன் இம்பீரியல் ஓட்டலில் நான் காத்திருக்க வேண்டும்!
அன்று இரவு ஜேம்ஸ் ஓட்டலில் சாப்பிட்டார்.
சார்! உங்களுக்கு போன்!
நான்சி பேசுகிறேன்.
ஓட்டல் வாசலில் வந்து நில்லுங்கள்!
ஜேம்ஸ் வாசலுக்கு வந்தார்.
காரில் ஏறிக்கொள்ளுங்கள்!
தங்கக்கட்டிகள் தயாரா?
தயார்! பெட்டியில் இருக்கின்றன!
கார் போயிற்று!
அணுக்கதிர்குண்டு வாங்க முயற்சிக்கும் இன்னொரு ஆள் யார் என்று தெரிந்ததா, ஜேம்ஸ்?

எங்கள் இரகசிய போலீஸ் விசாரித்துக் கொண்டிருக்கிறது!
பின்னால் ஒரு கார் வருகிறதே?
அவர்கள்தான் உங்கள் போட்டியாளரோ?
பின்னே வந்த கார் நெருங்கி வந்தது.
காரை நிறுத்தி யார் என்று பார்க்கலாமா?
வேண்டாம்! பெட்டி நிறையத் தங்கம் இருக்கிறது. வேகமாகப் போ!
பின்தொடர்ந்த காரில்...
நம் வேலையை முடி!
நெருங்கி விட்டோம்!

பின் காரில் ஒரு குழாய் நீண்டு சுட்டது!
அதைக் கவனிக்காமல் நான்சி கார் பறந்தது!
நிறுத்து! வழிமறித்து, நடுத்தெருவில் காரை நிறுத்து!
ஆனால், அந்தக் கார் திரும்பிச் சென்றது!
அந்தக் கார் திரும்பிவிட்டதே ஏன்?
தவறான காரைப் பின்தொடர்கிறோம் என்று தெரிந்திருக்கும்!
வந்த வேலை முடிந்தது!
இனி அந்தக் கார் எங்கே போனாலும் நமக்குத் தெரிந்துவிடும்!

நான்சி கார் தொடர்ந்து ஓடியது.
நம்ம போரத்தை முடிப்போமா?
முதலில் உங்கள் துப்பாக்கியை என் கையில் கொடுங்கள்!
யாரையும் நான் நம்புவதில்லை!
நீ மிகவும் முன் எச்சரிக்கையான பெண்தான்!
வேறு ஆயுதம் எதுவும் உங்களிடம் இருக்கிறதா என்று சோதித்துவிட்டுத்தான் வாலட்டிடம் உங்களை அழைத்துப்போவேன்.
தெரு ஓரத்தில் கார் நின்றது.
உங்களிடம் வேறு ஆயுதம் எதுவுமில்லை!

பெட்டியைத் திறந்து காட்டுங்கள்!
50 இலட்சம் பவுனுக்குத் தங்கக்கட்டிகள் தயார்!
ஸ்டால்கர் பேசுகிறேன். அந்தக் காரிலிருந்து பீப்...பீப் கேட்கிறதா?
தெளிவா கேட்குது!
பீப்... பீப்... பீப்...
உங்கள் டார்ச் ஒளியும் தெரியுது!
மீண்டும் காருக்கு வந்தார்கள்.
பெட்டி காரிலேயே இருக்கட்டும்!
சத்தம் கேட்டு, ஜேம்ஸ் மேலே பார்த்தார்.
மேலே ஹெலிகாப்டர்... வெளிச்சமும் தெரியுது!
ஜேம்ஸ்! இது உங்கள் சதி வேலை இல்லையே!

அதோ, டாக்டர் வாலட் வருகிறார்!
நான்சி! எல்லாம் சரியா இருக்கிறதா?
பெட்டி காரில் இருக்கிறது! நாம் உடனே புறப்படலாம்!
எனக்கு வேண்டியது?
அணுக்கதிர் குண்டு செய்யும் தொழில்நுட்பம் அடங்கிய கோப்பு அந்த வேனில் இருக்கிறது. வேனுடன் எடுத்துக் கொள்ளுங்கள்!
அப்போது ஒரு குரல் கேட்டது.
யாரும் அசையாதீங்க!

துப்பாக்கியைக் கீழே போடு! கையை மேலே தூக்கு!!
அப்போது ஹெலிகாப்டர் வந்தது.
அது எங்கள் ஹெலிகாப்டர்தான்!
நான்சி! இந்தப் பக்கம் வா!
நான்சி! போய்விடு!!

வாலட்டின் கையைக்
கட்டி, காரில்
ஏற்றுங்கள் !
நான்
நான்சியுடன்
காரில் வருகிறேன் !

வேனில் வாலட் ஏற்றப்பட்டார்.
ஹெலிகாப்டர் கிளம்பியது.
ஏ மிஸ்டர் !
நீயும்எங்களோடு
வா !

ஆனால், ஜேம்ஸ் மின்னல் வேகத்தில்
துப்பாக்கியை எடுக்கப் பாய்ந்தார் !

அவனை சுட்டுக் கொல்லு!
அதற்குள் ஜேம்ஸ் துப்பாக்கியை எடுத்துச் சுட்டார்!
டுமீல்!
ஜேம்ஸ் மறைவிடம் நோக்கி ஓடினார்!
ஹெலிகாப்டர் அவரை விரட்டியது!

ஜேம்ஸ் ஒரு மரத்தின் பின்னே பதுங்கினார். ஹெலிகாப்டர் சுற்றிச் சுற்றி வந்து சுட்டது!
ஜேம்ஸ்பாண்டும் சுட்டார்
ஒரு குண்டு ஹெலிகாப்டரின் பெட்ரோல் தொட்டியில் பாய்ந்தது! ஹெலிகாப்டர் தீப்பிடித்து, கீழே விழுந்து நொறுங்கியது!
நான்சியை மீட்க ஜேம்ஸ் ஓடி வந்தார்!

காரில் ஏறு! தங்கம் எங்கே?
காருக்குள்தான் இருக்கிறது!
ஜேம்ஸ் நெருங்குமுன் கார் கிளம்பிவிட்டது!
டுமீல்!
அவர்கள் வந்த கார் நிற்கிறதே!
அந்தக் காரில் ஜேம்ஸ் ஏறிக்கொண்டார்!
என்னைப் பின்தொடர்ந்து வந்தவர்கள் இவர்கள்தானா?

பீப்... பீப்... சத்தம் கேட்டது.
இந்த ஒலியைக் கேட்டுதான் நான்சியின் காரைப் பின் தொடர்ந்தார்களா?
நான்சி காரில் 'பீப்... பீப்... கருவியை இவர்கள் பொருத்தியிருக்காங்க. இப்போ எனக்குப் பயன்படுகிறது!
இருண்ட தெருவுக்குள் கார் சென்றது.
நிறுத்து!
நான்சி காரை நிறுத்தினாள்.
கீழே இறங்கு!
நீ யார்?
விரைவில் தெரிந்து கொள்ளுவாய்!

பீப... பீப... ஒலியை பின்பற்றி ஜேம்சும் அங்கே வந்தார்.
அதோ நான்சி கார்!
காரில் வருவது ஜேம்ஸ்பாண்டுதான்
இங்கே வரவேண்டாம் என்று சொல்!
அதற்குள் கார் வர, நான்சியை கார் முன் தள்ளிவிட்டான்!
ஜேம்ஸ்!
நான்சி மீது மோதாமல் ஜேம்ஸ் காரைத் திருப்பினார்.
பிழைத்தேன்!

ஸ்டால்கர் சுட்டான்!
டுமீல்!
ஜேம்ஸ் அவன் மீது காரை ஏற்ற முயற்சித்தார்!
கார் சக்கரம் மணலில் புதைந்துவிட்டது!
நல்ல நேரத்தில் இப்படி!
ஸ்டால்கர் நின்று, தைரியமாகச் சுட்டான!
டுமீல்!

கண்ணாடியை உடைத்துக்கொண்டு குண்டு பாய்ந்தது!
மயிரிழையில் ஜேம்ஸ் தப்பினார். காரைப் பின்னே எடுத்தார்!
மண்ணில் புதைக்கக் குழாய்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ரெயில்வே மண்வெட்டியும் இருந்தது.
அதுதான் சரி!
மண்வெட்டியைக் கையில் எடுத்துக்கொண்டு குழாய்களில் ஏறினான்!



மேலே வந்து, காரை நோக்கிச் சுட்டான்!
டுமீல்!
ஜேம்ஸ் தலையை அசைத்துத் தப்பினார்!
ஸ்டால்கர் குழாயை உருட்டிவிட முயற்சித்தான்!
தப்பவே முடியாது!
ஜேம்ஸ் காரின் வேகத்தைக் கூட்டினார்!

காரிலிருந்து ஜேம்ஸ் குதித்தார்!
அடுக்கி வைத்திருந்த குழாய்கள் மீது கார் மோதியது!
டமார்!
குழாய்கள் உருண்டன!
ஆ... செத்தேன்!

குழாய்கள் உருண்டு ஸ்டால்கரை நசுக்கின!
நன்றி! ஜேம்ஸ்! என்னைக் காப்பாற்றி விட்டீர்கள்!!
ஜேம்ஸ்பாண்டு அலுவலகத்துக்குத் திரும்பினார்.
டாக்டர் வாலட் எதிரிகளிடம் சிக்கிக் கொண்டார்!
அணுக்கதிர் குண்டு செய்யும் முறையும் அவர்கள் கையில் அகப்பட்டுக் கொண்டு விட்டது!
யார் அவர்கள்?
அதேநேரம்
உலகப் புகழ்பெற்ற லண்டன் கோபுரம்வெடித்துச்சிதறியது!
படார்!

வாலட்டைக் கடத்தியவர்களின் வேலையாகத்தான் இருக்கும்!
நிச்சயம் அவர்கள் வேலைதான்
மறுநாள்.
அமைச்சரிடமிருந்து 'எம்'முக்கு அழைப்பு!
மிஸ்டர் எம் கோபுரம் வெடித்தது பேராலயம் வெடித்தது இதெல்லாப் யார் வேலை?
அதுதான் விசாரித்துக் கொண்டிருக்கிறோம்!
உங்களுக்கு ஒரு தடயம் தருகிறேன்!
குண்டுவீச்சை நிறுத் 5 கோடி பவுன் தங்கக் கட்டிகள் வேண்டுமாம்!

பைசா கோபுரம் வெடிக்குமாம்!
ஈபிள் கோபுரம் இடிந்து விழுமாம்!
சுதந்திரச் சிலை நொறுங்கிப் போகுமாம்!
உளவுத்துறை
இதற்கு என்ன பதில் சொல்லுவது?
முன்பு 50 இலட்சம் பவுன்தானே கேட்டார்கள்? இப்போது நேச நாடுகள் சேர்ந்து 50 கோடி கொடுக்க வேண்டுமாம்!
அணுகதிர் கண்ணுக்குத் தெரியாது. காதுக்கும் கேட்காது!


அதனால்தான் ஓசையில்லாமல் தாக்குதல் நடத்த முடிகிறது.
அந்த அழிவிலிருந்து உலகைக் காப்பது எப்படி?
கதிர் அலை குண்டுகள் தயாரிக்கும் தொழில் நுட்பத்தைக் கைப்பற்றி அழிக்க வேண்டும்!
முதலில் அந்தக் கூட்டத்தைக் கண்டு பிடிக்க வேண்டும்!
இந்த நாசகாரக் கும்பல் யார், ஜேம்ஸ்?
கண்டுபிடித்துவிடலாம், பாஸ்!
உங்களுக்கு ஒரு யூகமும் இல்லையா?
பெரிய மாபியா கூட்டமாக இருக்கக்கூடும்!

பெக்ட்ரா கூட்டம்தான் உலகில் பெரியது.
பெக்ட்ராவைத்தான் சுட்டுக் கொன்று விட்டோமே!
மேடம் பெக்ட்ரா இருக்கிறாளே!
தடங்கலுக்கு வருந்துகிறேன்!
பிரெஞ்சு மக்களுக்கு ஒரு முக்கிய செய்தியைத் தெரிவிக்க விரும்புகிறேன்!
பிரான்சு அதிபர் தொலைக்காட்சியில் பேசுகிறார்!
ஒரு கூட்டம் ஒரு கோடி பவுன் தங்கம் கேட்கிறது. இல்லாவிட்டால், ஈபிள் கோபுரத்தைத் தகர்ப்பார்களாம்!
ஆனால், இந்தக் கொள்ளைக் கூட்டத்துக்கு நாம் பணியப் போவதில்லை!

இதைக் கொள்ளைக்காரர்களுக்கு அழுத்தம் திருத்தமாகச் சொல்ல விரும்புகிறேன்.
உங்கள் மிரட்டலுக்கு பிரான்க பணியாது!
ஈபிள் கோபுரத்தைக் காப்பாற்ற எங்களால் முடியும்!
இது அவசர முடிவு!
உடனடியாக நமது பாரிஸ் ஏஜண்டை அழையுங்கள்!
அடுத்த ஒரு மணி நேரத்தில் ஈபிள் கோபுரம் தாக்கப்பட்டது.
இதை எச்சரிக்கையாக எடுத்துக்கொள்ள வேண்டும்!
நல்லவேளை, சேதம் கொஞ்சம்தான்!

வாஷிங்டன்... வெள்ளை மாளிகை.
பாரீசில் இருந்து புதிதாக ஏதாவது தகவல் உண்டா?
தங்கம் கொடுக்க இப்போது சம்மதித்து விட்டார்கள். நாம் என்ன செய்வது?
அதேநேரம் சுதந்திரச் சிலையின் கை வெடித்து விழுந்தது!
உளவுத்துறை.
தங்கம் கொடுக்க அமெரிக்கா, பிரான்ஸ் முடிவு செய்துவிட்டன. நாமும் கொடுக்க வேண்டியதுதான்!

தங்கக் கட்டிகளை ஏற்றிக்கொண்டு ஒரு அமெரிக்கக் கப்பல் புறப்பட்டது.
நாம் எங்கே போகிறோம் கேப்டன்?
பிறகுதான் தகவல் வரும்
நீங்கள் சொன்ன இடத்துக்கு வந்துவிட்டோம். கப்பல் நங்கூரம் இறக்கப் பட்டுவிட்டது.
அதோ பாருங்கள், ஒரு நீர்மூழ்கிக் கப்பல்!

மூழ்கிக் கப்பலிலிருந்து மூன்று முகமூடிகள் அமெரிக்க கப்பலுக்கு
தார்கள்.


படகுகளில் போகிறோம்!
விரைந்து போங்கள்! வெடி வைத்து கப்பலை மூழ்கடிக்கப் போகிறோம்!
கப்பலில் இருந்த தங்கம், நீர்மூழ்கிக் கப்பலில் ஏற்றப்பட்டது. பிறகு...
டமார்!


ழியில் வந்த ஒரு கப்பலில் ஏறி, அவர்கள் தப்பினார்கள்.
பாரிசிலிருந்து ஒரு மிதக்கும் விமானம் புறப்பட்டது.
மத்திய தரைக்கடலில் எந்த இடத்தில் இறங்க வேண்டும்?
அதுபற்றி வானொலியில் தகவல் வரும்.
நாம் கடலில் இறங்கவேண்டிய இடம் வந்துவிட்டது!
இங்கேதான் தங்கக் கட்டிகளை இறக்க வேண்டுமோ?

வானொலியில் தகவல் வருகிறது.
வந்து கேட்பவர்களிடம் தங்கக் கட்டிகளை கொடுங்கள்!
ஒரு படகு வருகிறது
படகில் ஒரு முகமூடி.
படகு மிதக்கும் விமானத்தை நெருங்கியது.
தங்கக் கட்டிகள் தயாரா?
யார் நீங்கள்?
இதோ, தங்கக் கட்டிகள்!
நாங்கள் எடுத்துக் கொள்ளுகிறோம். நீங்கள் அந்தப் படகில் ஏறி கரைக்குப் போய்விடுங்கள்

எங்கள விமானம்?
நான் சொன்னபடி செய்யுங்கள்!
அவர்கள் படகுக்குப் போனார்கள். முகமூடி தங்கத்துடன் பறந்தான்!
அவன் யார் என்றே தெரியவில்லையே!
விமானம் நீர்மூழ்கிக் கப்பலுக்குப் போய்ச் சேர்ந்தது!
உளவுத்துறை
அமெரிக்காவும் பிரான்சும் தங்கம் அனுப்பிவிட்டன!
நமக்குக் கொடுத்த கெடு முடிய 48 மணி மணி நேரமே இருக்கிறது!

நீர்மூழ்கிக் கப்பல் வைத்துக்கொள்ளும் அளவுக்குப் பெரிய மாபியா கும்பல் எது?
பெக்ட்ராதான்! இந்த நான்சிகூட அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவளாகத்தான் இருக்க வேண்டும்.
அதேநேரம்... நைல் ஆற்றில்...
இது மீன் அல்ல! பெண் பிணம்!
நான்சியின் சுயரூபம் தெரிந்தால், உண்மை வெளிப்படும்
அவளது சுயரூபம் தெரியாமலே டாக்டர் வால உதவியாளராக வைத்துக் கொண்டார்போலிருக்கிறது
ஜேம்ஸ்! உங்களுக்குக் கெய்ரோவிலிருந்து போன்!
ஜேம்ஸ்பாண்டுதான் பேசறேன்... நீங்கள்... கரீம்... நினைவிருக்கிறது... கெய்ரோ போலீஸ் ஆணையர்தானே?
ஆமாம். உங்களுக்கு ஒரு அதிர்ச்சிச் செய்தி, ஜேம்ஸ்!

நான்சி என்ற பெண்ணை கெய்ரோவிலிருந்து லண்டனுக்கு அழைத்துப் போனீர்கள் அல்லவா?
அவளது கைரேகை எங்களிடம் இருக்கிறது.
நைல் ஆற்றில் மீன் பிடித்த மீனவர்கள் ஒரு பெண்ணின் பிணத்தைக் கொண்டு வந்தார்கள். அதன் கைரேகையும், நான்சியின் கைரேகையும் ஒன்று போல இருக்கின்றன.
பாஸ்! திடீர் திருப்பம்!
என்ன ஜேம்ஸ்?
உண்மையான நான்சி கெய்ரோவில் பிண அறையில் இருக்கிறாள்.
டாக்டர் வாலட் வேறு எந்தப் பெண்ணிடமோ ஏமாந்துவிட்டார்!
ஏமாந்தது நாமும்தான்!

இந்த நான்சி எதிரியின் கையாள் என்பது உறுதியாகிவிட்டது.
ஆமாம், எதிரி யார்?
ஜேம்ஸ்! கெடு நெருங்குகிற
தங்கம் கொடுக்காவிட்டால், பேராலயம் முழுவதுமே தகர்க்கப்பட்டுவிடும்!
ஜேம்ஸ் நான்சியை சந்தித்தார்.
ஜேம்ஸ்! ஏன் கவலையா இருக்கீங்க?
என் வேலை போய்விட்டது!
நான் உண்மையா உழைக்கிறேன். ஆனால், என் மீதே சந்தேகம். என் உயிருக்கே ஆபத்து
நான்சி அதிர்ந்தாள்.
உங்கள் உயிருக்கு ஆபத்தா?
ஆமாம், நான்சி. நான் இங்கிலாந்தை விட்டே ஓடிவிட விரும்புகிறேன்!
அதுதான் உங்கள் முடிவு என்றால் என்னுடன் வாருங்கள்!
எனக்கு ஒரே பயமாக இருக்கிறது, நான்சி. எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம்.

ஜேம்ஸ்பாண்டின் வீட்டுக்கு வந்தார்கள்.
என் சாமான்களை எடுத்துக்கொண்டு கிளம்புவோம்!
வீட்டுக்குள் நுழைந்ததும்—
துரோகியே! வா!!
துப்பாக்கியை எடுக்காதே! கையை மேலே தூக்கு!
எனக்குத் தெரியாமல் என் வீட்டில் சோதனையா?
நாங்கள் சந்தேகப்பட்டது சரியாகிவிட்டது! உனக்கு ஏது இவ்வளவு வைரங்கள்!
நமது இரகசிய ஆவணங்களை மைக்ரோ பிலிம் பண்ணி வைத்திருக்கிறாயே!

வீட்டை சோதனை போடாவிட்டால், உன் துரோகத்துக்கு இத்தனை ஆதாரம் கிடைக்குமா?
இன்னொரு ஆதாரமும் இருக்கிறது!
இந்த விளக்கை பாருங்கள்!
அதே விளக்கால் ஜேம்ஸ் தாக்கினார்!
நிறுத்து ஜேம்ஸ்!
இந்தா உனக்கு ஒன்று!
ஜேம்ஸ்! பின்னால் ஒருவன்!

அவனை நோக்கித் துப்பாக்கி சீறியது!
இவர்கள் எல்லாம் யார் ஜேம்ஸ்?
எங்கள் ஆபீசு ஆட்கள்!
வா, ஓடிவிடுவோம்!
எங்கே போகலாம்?
நீ வழி காட்டுவதாகச் சொன்னாயே?
முதலில் என் வீட்டுக்குப் போவோம்!
வீட்டுக்கு வந்தார்கள்.
உங்கள் மீது எப்படி சந்தேகம் வந்தது ஜேம்ஸ்?

உன் அழகில் நான் மயங்கி, டாக்டர் வாலட்டைக் கோட்டை விட்டேனாம்!
யாரோ அவரைக் கடத்திப் போய்விட்டார்கள். அதற்கு நீங்கள் என்ன செய்வீர்கள்?
கைதி தப்பி ஓடினால், போலீஸ்காரனைத்தானே சஸ்பெண்டு பண்ணுவார்கள்?
இங்கிலாந்தைவிட்டு வெளியேறினால்தான் என் தலை தப்பும்!
முதலில் இதைக் குடியுங்கள்! யோசிப்போம்!
உங்களுக்கு வெளிநாட்டில் வேலை வாங்கித் தருகிறேன்!
ஜேம்சுக்கு தலை சுற்றியது....
எ...ஏ... நாட்டில்...
எனக்கு மயக்கம் வருது!

என்ன பானம் கொடுத்தாய், நான்சி?
இன்னும் முழுமையா மயங்கவில்லையா?
இந்தா, ஒரு குத்து வாங்கிக்கொள்!
ஜேம்சை ஒரு விமானத்தில் ஏற்றினாள்.
நல்லா மயங்கிவிட்டார்! முன் ச்சரிக்கையாகக் கையிலும் விலங்கு மாட்டிவிட்டேன்!
என்... கை... கை... எங்கே?
என்னிடம் உன் கைவரிசையைக் காட்ட முடியாது!

பீப்...பீப்...பீப்...
சிக்னல் கிடைத்துவிட்டது!
இறங்க வேண்டியதுதான்!
நீர்மூழ்கிக் கப்பலை நோக்கி விமானம் சென்றது!
இதுதான் இறங்கவேண்டிய தளம்!
நீர்மூழ்கிக் கப்பல் அருகே ஒரு மேடை மிதந்தது.
நான்சி... இது எந்த இடம்?
நீங்கள் புதிதாக வேலை பார்க்கப் போகுமிடம்!


ஜம்சின் கைவிலங்கை நான்சி கழற்றினாள்.
இவன் ஏன் துப்பாக்கியுடன் நிற்கிறான்?. எனக்கு பயமா இருக்கிறது!
நான்சி நீர்மூழ்கிக் கப்பலுக்குள் ஜேம்ஸ்பாண்டை அழைத்துப் போனாள்.
கப்பல் போலத் தெரியுது!
மேடம் பெட்ரா! வணக்கம்!
இங்கே புதிதாக வேலைக்கு வரும் ஜேம்ஸ்பாண்டு இவர்தானா?

எனக்கு இங்கே என்ன வேலை?
உன் திறமைக்கு ஏற்ற வேலை இங்கே இருக்கு!
என் மீது நம்பிக்கை வைத்தால், உங்களுக்காக உயிரையும் கொடுப்பேன்!
புது ஆட்களை உடனே நம்ப முடியுமா? எனது சோதனைகளில் நீ தேற வேண்டுமே!


இந்தப் பூனை அழகா இருக்கே!
புது ஆட்களை இந்தப் பூனைகூட நம்பாது!
என்னிடம் கொடுங்கள்! நம்புகிறதா, இல்லையா என்று பார்ப்போம்!
மேடம்! உங்கள் பூனை என்னை நம்பிவிட்டது!
என் சோதனையில் நீ வெற்றி பெற வேண்டுமே! முதல் சோதனை!
டாக்டர் வால்ட் அழைத்து வரப்பட்டார்!
ஜேம்ஸ்! நான்சி! நீங்கள் இருவரும் பிடிபட்டுவிட்டீர்களா?

இல்லை, வாலட்! ஜேம்சை இங்கிலாந்து உளவு நிறுவனம் தேடுகிறது. அவரோ என்னுடன் சேர்ந்துவிட்டார்.
இந்தப் பெண் எப்போதுமே என் உதவியாளர். ஆனால், இவள் பெயர் நான்சி அல்ல.
என்னது! இவள் நான்சி இல்லையா?
கெய்ரோவில் உங்கள் உதவியாளராக இருந்த நான்சியைக் கொன்று பிணத்தை ஆற்றில் போட்டுவிட்டோம்.
இவள் ஒபல். இவள்முகத்தில் சிறு அறுவைகள் செய்து, நான்சி போலஆக்கிவிட்டோம்!
அதிருக்கட்டும் ஜேம்ஸ்! உங்களுக்கு ஒரு சோதனை! அந்த அணுக்கதிர் குண்டை லண்டன் பேராலயத்தின் மீது வீசவேண்டும்!

இதுதான்
அணுக்கதிர் குண்டு.
அந்தக் குண்டை
பேராலயம் மீது நான் வீசவேண்டும்,
அல்லவாதானே?
ஆமா. நான் கேட்ட தங்கத்தை இங்கிருந்து அரசு இன்னும் தரவில்லை!
என் தாய்நாட்டின் மீது இந்த குண்டை வீசி உங்களிடம் எனக்குள்ள விசுவாசத்தைக் காட்ட வேண்டும்!
இதுதானே சோதனை?
இன்னும் ஒரு சோதனையும் இருக்கிறது!

இந்த ஓபல் மீது உங்களுக்குக் காதல் உண்டா, இல்லையா என்று சோதனை !
இந்த சின்ன ரிமோட் கண்ட்ரோலைக் கையில் பிடி !
ஓபல் காது வளையம் அணிந்திருக்கிறாள். அதில் விஷ ஊசிகள் இருப்பது அவளுக்கே தெரியாது !
இந்த ரிமோட கண்ட்ரோலைக் கொண்டு, அந்த ஊசிகளை அவள் காதில் குத்தச் செய்யலாம் !
ரிமோட்கண்ட்ரோலை அழுத்தும் ! விஷ ஊசிகள் ஓபலின் காதுகளைக் குத்தி, அவளைக் கொல்லட்டும் !

ஜேம்ஸ்! என்ன தயக்கம்! ஒபலைக் கொல்லு!
ஜேம்ஸ்... வேண்டாம்! வேண்டாம்!!
திடீர் என்று ஜேம்ஸ்—
இந்தப்பூனையைப் பிடி! நான் ரிமோட் கண்ட்ரோலை இயக்குகிறேன்!
பூனை முகத்தில் விழுந்ததும், காவலாளியின் துப்பாக்கி நழுவியது!
ஆ!
ஜேம்ஸ் துப்பாக்கியை எடுத்துக்கொண்டார்!
கடைசியாகக் கடவுளைத் தொழுதுகொள்!
காவலாளி பாய்ந்தான்!
டேய்...
டுமீல்...!

ஓபல் பாய்ந்து பெக்ட்ரா மேடத்தைப் பிடித்துக் கொண்டாள்!
எந்த பட்டனையும் தொடாதே!
துப்பாக்கிச் சத்தம் கேட் காவலாளிகள் பாய்ந்து வந்தார்கள்!
ஏதோ ஆபத்து
ஜேம்ஸ் கதவைப் பூட்டினார்.
டாக்டர்! கதிர் குண்டைக் கையில் எடுத்துக் கொள்ளுங்கள்!
முட்டாள்களே! இங்கே இருந்து யாரும் உயிருடன் தப்ப முடியாது!
ஆயுதங்களைக் கீழே போடுங்கள்!
மேடம்! உங்களுக்கு ஒன்றும் ஆபத்து இல்லையே?

காவலர்களே! நான் நன்றாக இருக்கிறேன். மேல்தளத்துக்கு வருகிறேன்!
ஓபல்! உன் காதலைப் பற்றி நான் சொன்னது பொய்! ஜேம்சை சோதிக்க அப்படிச் சொன்னேன்! அவனை சுடு!!
முதலில் உன் காதணியை சோதிப்போம்!
அய்யோ... வேண்டாம்! வேண்டாம்!!
நாங்கள் படகில் தப்பிப் போகப் போகிறோம். நீ ஏதாவது வம்பு பண்ணினால், ரிமோட்கண்ட்ரோலை இயக்கி, உன்னைக் கொன்றுவிடுவேன்

ஜேம்ஸ்பாண்டு, ஓபல், வாலட் சிறிய படகில் புறப்பட்டார்கள்.
அவர்கள் போகட்டும்! சுடாதீர்கள்!!
உன் காவலாளிகள் எங்களைச் சுட்டால், உன் கதி அதோகதிதான்!
மூவரும் விமானத்துக்கு வந்தார்கள்.
நீ சீக்கிரம் விமானத்தைக் கிளப்பு!
ஜேம்ஸ்! அவள் காதணிகளைக் கழற்றுகிறாள்!
அந்த விமானத்தை சுட்டுத்தள்ளுங்க!

விமானம் பறந்தது!
டாக்டர் வாலட்! இந்த கதிர் குண்டு வெடிக்கும் நிலையில்தானே இருக்கிறது!
ஆமாம் ஜேம்ஸ்! சீக்கிரம்... அவர்களுக்கு முன்னே...
ஜேம்ஸ் குண்டை வீசினார்!
அது அணுசக்தி ரியாக்டர் கொண்டது. அதனால் கொஞ்ச நேரமாகும்.

ராணி சிண்டிகேட் சார்பில் அச்சிட்டு வெளியிட்டவர்: சி. கல்யாண சுந்தரம், ராணி பிரஸ், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007. ஆசிரியர்: அ.மா. சாமி, 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007.

அடுத்த காமிக்ஸ்

ஒற்றர் படைத் தலைவன்
'கார்சன்' ஆவேசம்!

துடிக்கும் துப்பாக்கி

வண்ணப் படக்கதை

இராணுவத்தில் ஒரு குள்ளநரி!
எதிரிகளுக்கு கள்ளத்தனமாய்
துப்பாக்கி விற்ற துரோகி!!
இரகசியம் வெளிவந்தது எப்படி?

ஜனவரி 15-ந்தேதி பாருங்கள்!

"ராணி காமிக்ஸ்", சென்னை-600 007.

Regd. with the Registrar of Newspaper JANUARY 1. 2004. (TAMIL FORTNIGHTLY)
for India under No. 42576/84 –ISSN 0??1-8567